OUTREACH Volume IX 2016 356 – 359
A Multi - Disciplinary Refereed Journal

ISSN (Print) : 0975 1246
ISSN (Online) : 2321 8835
www.voceoutreach.in

# நாட்டுப்புற வேளாண்மையில் உழவு பற்றிய பழமொழிகள்

## (தூத்துக்குடி மாவட்டம்)

**மா.முத்துசாமி**, இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை, வ.உ.சி கல்லூரி, தூத்துக்குடி

**முன்னுரை**

நாட்டுபுற மக்கள் தங்களின் பட்டறிவை வாழ்வியல் சார்ந்து வெளிப்படுத்தினர். அந்தந்த நேரத்து உணர்ச்சிகளுக்கும், மன நிலைக்கும் ஏற்ப அவை பல வடிவங்கள் பெற்றன. அதில் ஒரு வகையே பழமொழிகள். இவை வாய்மொழி இலக்கியங்கள் என்பதை,

‘பல்லோர் கூறிய பழமொழி எல்லாம்

வாயே பாடுதல் வாய்த்தமை தோழி”

என்னும் அகப்பாடல் புலப்படுத்துகிறது.

பழமொழி ஒரு குறிப்பிட்ட இனத்திற்கோ மொழிக்கோ உரியதல்ல. அது ஒட்டு மொத்த மனித அனுபவத்தின் வெளிப்பாடு. எனவே உலகிலுள்ள எல்லா மொழிகளிலும் பழமொழி காணப்படுகிறது. மலையாளத்தில் „பழஞ்சொல்… என்றும், தெலுங்கில் „நாதுடி… என்றும், கன்னடத்தில், „நாண்ணுடி… என்றும் ஆங்கிலத்தில் Proverb என்றும் பழமொழி பல்வேறு பெயர்களில் வழங்கப்படுகிறது.

தமிழில் பழமொழி என்ற சொல் மூதுரை, முதுமை, மொழிமை, முன்சொல், பழஞ்சொல் என்ற ஆறு பொருளைத் தருவதாக „சேந்தன் திவாகரம்… கூறுகிறது. இது கதையை அடிப்படையாகக் கொண்டு வழங்கப்படுவதால் தஞ்சை மாவட்டத்தில் உபகதை… என்றும் இராமநாதபுரத்தில் ஓவகதை… என்றும் சேலம் பகுதிகளில் சொலவந்தரம்… என்றும் கோவை மாவட்டத்தில் ஒப்புத்திட்டம்… என்றும் நெல்லை. தூத்துக்குடி மாவட்டத்தில் சொலவம்… சொலவடை… என்றும் பழமொழியைப் பலவாறு குறிப்பிடுகின்றனர்.

**பழமொழி அமைப்பு :**

பழமொழிகள் ஒரே மூச்சில் சுருக்கமாகச் சிறந்த பொருட்செறிவுடன் கூர்மையுடன் மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, வாழ்க்கையில் கடைப்பிடிக்கப்பட்டு வருவதாக இருக்க வேண்டும். ஒரு சொல்லில் பழமொழி அமையாது. பழிமொழியில் இருசொற்கள் இருக்கின்றன. நிலைத்த தொடர் அமைப்பு உடையது. பழமொழிகளில் எதுகை, மோனை, முரண்தொடை இருக்கிறது. பிறிது மொழிதல் அணி போல ஒன்று சொல்லி மற்றொன்றை விளக்குகிறது. இயற்கை சூழலுடன் உருவகம், உவமைப் பண்பு கொண்டதாகவும் தற்சார்பற்று நேர்ப்பொருளை உணர்த்தக் கூடியதாகவும் அமைகிறது. இங்கு வாழ்க்கை அனுபவத்திலிருந்து சிக்கலைத் தீர்க்க உதவுகிறது. பழத்தின் சாறெனக் கூறும் இயல்புடன் இருக்கும் என்று பழமொழிகளின் அமைப்புகள் பற்றி தே. லூர்து என்பவர் கூறியுள்ளார்.

**பழமொழியின் இயல்புகள் :**

பழமொழியினைத் தொல்காப்பியர் யாப்பின் வகைகளில் முதுமொழி எனக் குறிப்பிடுகிறார். „நுண்மையும்… சுருக்கமும் ஒளியுடைமையும், மென்மையும் என்றிவை விளங்கத் தோன்றி, குறித்த பொருளை முடித்தற்கு வருஉம், ஏது …… முதலிய முதுமொழி என்ப” என நுட்பம், சுருக்கம், ஒளியுடைமை மென்மை ஆகிய தன்மைகளைக் கொண்டிருப்பதோடு மக்கள் மனதில் ஆழமாகப் பதிந்து, குறிப்பிட்ட ஒன்றைச் செய்யத் தூண்டும் ஆற்றல் வாய்ந்தது என்பார் தொல்காப்பியர். இதனையே கிரேக்க அறிஞரான அரிஸ்டாட்டில் ‘பழமொழிகள் அறிவின் வளர்ச்சியிலேயே பிறக்கின்றன. அவை சுருக்கம், தெளிவு, பொருத்தம் ஆகிய சிறப்புக்களைப் பெற்றுள்ளன. இவற்றால் அவைகள் நாள்தோறும் இறந்து கொண்டிருக்கும் இவ்வுலகில் இறவாமல் வாழ்கின்றன” எனக் குறிப்பிடுகின்றார்.

‘மக்களின் பேச்சிலே கலந்து பழகிவரும் செறிவு மிக்க அறிவு வாக்கியமே பழமொழி என ஆர்ச்சர் டெய்லர் குறிப்பிடுகின்றார். ஆக்ஸ்போர்டு அகராதியே, ‘வாழ்க்கையை உற்று நோக்கி அதில் உணர்ந்த உண்மைகளின் சுருக்கமே பழமொழி” என விளக்கம் தருகிறது. இவற்றைப் பார்க்கும் போது தனிமனிதன் அல்லது சமூகம் தங்கள் அனுபவத்தின் மூலம்

கண்ட உண்மைகளைச் சுருக்கமாகவும், எளிமையாகவும், தெளிவாகவும் மனதில் ஆழமாகப் பதியும் வகையில் வெளிப்படுத்தப்பட்டவையே பழமொழி என உணர முடிகிறது. நாட்டுப்புற வேளாண்மையில் உழவு பற்றிய பழமொழிகள் எவ்வாறு காணப்படுகின்றன என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**உழவு பற்றிய பழமொழிகள்**

நாட்டுப்புற மக்கள் எந்தெந்தக் காலங்களில் உழுதால் அதிகமான பயனைப் பெறமுடியும் என்பதை,

'சித்திரை மாத உழவு பத்தரை மாத்துத்தங்கம்" இப்பழமொழி பதிவு செய்கிறது. சித்திரை மாதம் நல்ல வெயில் காலம். அக்காலத்தில் உழும்போது நிலத்தின் மேல் மண் கீழும், கீழ் மண் மேலும் மாறி மாறி சூரிய வெப்பத்தினால் உலர்த்தப்படுவதோடு களைகள் வெயிலினால் முழுமையாக அழிந்து விடுகிறது. மேலும் நன்கு புழுதியாகி வேளாண்மைக்கு ஏற்ற நிலமாக இருக்கும் என்பதை வெளிப்படுத்துகிறது.

"அழுதுக்கிட்டு இருந்தாலும் உழுதுக்கிட்டு இருக்கணும்" என்ற பழமொழியின் வாயிலாக வேளாண்மை செய்து வரும் விவசாயிகளின் வீட்டில் எவ்வளவு துன்பங்கள் இருந்தாலும் அன்றாடம் செய்ய வேண்டிய வேலைகளைச் செய்ய தவறக்கூடாது. என்பதை அறிய முடிகிறது.

"எழுழவு அடிப்பதும் சரி ஒரு எடுப்புழவு அடிப்பதும் சரி" என்ற பழமெரியின் மூலம் நிலங்களில் எத்தனை உழவு அடித்தாலும் விதைப்பதற்கு முன்னால் புரட்டாசி மாதம் ஒரு எடுப்புழவு அடித்தால் தான் அதிகமான விளைச்சலைப் பெற முடியும் என்பதனை அறிய முடிகிறது.

'அகல உழுவதைக் காட்டிலும்
ஆழ உழுவது மேல்"

என்ற பழமொழி நஞ்சை நிலமாக இருந்தாலும் புஞ்சை நிலமாக இருந்தாலும் உழவு ஒன்றுதான் அடிப்படையாக அமைகிறது. நன்கு ஆழமாக புழுதிபட உழுவதால் நீர்ப்பிடிப்புத் தன்மையை அதிகரிக்கச் செய்கிறது. இதனால்

விளைச்சல் பெருகுகிறது. என்று இன்றைய அறிவியல் ஆய்வு கூறும் செய்தியாகும் இதன்மூலம் அழமாக உழுவதன் சிறப்பினை நன்கு அறியலாம்.

'ஆடி உழுது தாள விதை"

என்ற பழமொழி நிலத்தினை ஆழமாக உழுதால் தான் விதையினை நன்கு விதைக்க முடியும் பயிா் செழித்து வளரும் என்பதை உணர்த்துகிறது.

'நஞ்சைக்கு எழுழவு

புஞ்சைக்கு நாலுழவு"

என்ற பழமொழி நஞ்சை நிலத்திற்கு ஏழு உழவும், புஞ்சை நிலத்திற்கு நான்கு உழவும் அடித்தால் நல்ல பலன் கிடைக்கும் என விளக்குகிறது.

'உழுதசேறு காஞ்சா ஒழுக்கு நெல்லுக்கூட கிடைக்காது"

என்ற பழமொழி நெல் பயிருக்கு நன்கு உழவு செய்ய வேண்டும். அவ்வாறு உழுதால்தான் நிலம் நன்கு சேறாகி நீா் சேமிக்கும் தன்மையைப் பெறும். இவ்வாறு நன்கு சேறாகத் தொழி கலக்குதல் வேண்டும் என்பதை உணர்த்துகிறது.

**முடிவுரை:**

உழவுத் தொழிலின் அடிப்படை உழுதலாகும். அகல உழுவதைவிட ஆழ உழுவதே மேல் என்ற பழமொழிக்கேற்ப நிலத்தை உழுது பண்படுத்தி வேளாண்மை செய்து வந்துள்ளனா். இவ்வாறு நாட்டுப் புற மக்களிடம் வேளாண்மை குறித்த பழமொழிகள் காணப்பட்டு வந்திருப்பதை அறிய முடிகிறது.